'நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்' (யோசு 24:15)

# நற்செய்திப் பணியாளர்

(சிவகங்கை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களின் மாதச் செய்தி மடல்)

அருள் :XVI ஜூன் கி.பி. 2025 சான்று : 186



## அனலாய் இயக்குமய்யா!


ஆர்.எஸ்.மங்கலம்


காளையார்கோவில்

# புதிய பணியாளர்கள் பயிற்சி


அருள்சான்று நிலையம்


சாயல்குடி


அருள்சான்று நிலையம்

அருளமுது
ஆதாரக்குழுக்
கூடுகை


அமைதியகம்

**பாசத்திற்குரிய உடனுழைக்கும் நற்செய்திப் பணி குடும்பமே,**

எதிர்நோக்கி இருப்பதில் மகிழ்ச்சி கொள்ளுங்கள் (உரோ 12:12) என்ற பவுலடியாரின் அறைகூவலின்படி நானும் நீங்களும் எதிர்நோக்கி இருப்பதில் மகிழ்ச்சி கொள்ள வாழ்த்துகிறேன். இறைவேண்டல் செய்கிறேன்.

'ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது. ஏனெனில் அவர் எனக்கு அருள் பொழிவு செய்துள்ளார். ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும், ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பியுள்ளார் (லூக் 4:18,19) என்ற இயேசு கிறிஸ்து, அவருடைய வாழ்க்கை, இறப்பு மற்றும் உயிர்ப்பு வழியாக யூபிலியை நிறைவேற்றினார். நானும் நீங்களும் அப்படித்தான் யூபிலியைக் கொண்டாட வேண்டும்.

யூபிலியை கொண்டாடத் தயாரிக்கும் ஆண்டுகளாக இரண்டு ஆண்டுகளை நமக்கு திரு அவை தந்தது.

1. கிபி 2023 சங்க ஏடுகளின் ஆண்டு 1962- 1965 க்கு இடையே நடைபெற்ற இரண்டாவது வத்திக்கான் பொதுச்சங்கத்தின் முக்கிய நான்கு ஏடுகளை படிக்கவும் (சென்ற இதழில் இதைப் பற்றி எழுதி இருக்கிறேன்).

2. கிபி 2024 இறைவேண்டல் ஆண்டாக இறைவேண்டல் செய்யவும் திருத்தந்தை பிரான்சிஸ் வலியுறுத்தினார். அது மட்டுமல்ல அதற்கான வழிகளையும் காட்டினார். இறைவேண்டலை மையப்படுத்தி 38 மறைக்கல்வி உரைகளைத் திரு அவைக்கு தந்தார்.

'இயேசுவே! தாவீதின் மகனே, எனக்கு இரங்கும் (மாற் 10:47) என்று பார்வை குறைபாடு உள்ள மாற்றுத்திறனாளி பர்த்திமேயு எழுப்பிய இறைவேண்டலை மையப்படுத்தி இறைவேண்டல் பற்றிய மறைக்கல்வி உரையை தொடங்கிய திருத்தந்தை,' தந்தையே, உன் கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்' என்று உரத்த குரலில் கூறி உயிர் துறந்த (லூக் 23 :46) இயேசு கிறிஸ்து ஆண்டவரின் இறை வேண்டலுடன் இத்தொடரை நிறைவு செய்தார்.

மேலே கூறப்பட்ட இரண்டு செயல்பாடுகளையும் முழுமையாகச் செய்யாமல் அடுத்த நிகழ்வான யூபிலி கொண்டாட்டத்திற்கு மிக எளிதாக வந்து விட்டோம். தொடர்ந்து சடங்கு வாழ்க்கை, கொண்டாட்ட வாழ்க்கை என்று தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இன்று கடவுள் விரும்புகிற, இரண்டாம் வத்திக்கான பொதுச்சங்க ஏடுகளில் உள்ள உண்மைக் கருத்துக்கள் (1965 களில்) நடைமுறைக்கு வந்துள்ளதா? இணைந்து பயணிக்கும் திரு அவை, பங்கேற்பு திரு அவை சிறிதளவாவது உருவாகி இருக்கிறதா? திருத்தந்தை சொன்ன அந்த நான்கு ஏடுகளை படித்தால் தானே அது விளங்கும்.

அனைவருக்கும் நினைவிருக்கும் என்று நம்புகின்றேன். இரண்டாவது வத்திகான் பொதுச் சங்கத்தின் பொன்விழா நிகழ்வில் கிபி 2015 ஆம் ஆண்டு(கிபி1965-கிபி 2015) திருத்தந்தை பிரான்சிஸ் உரையாற்றிய போது, அவர் விடுத்த அறைகூவல் 'திரு அவையை இணைந்து பயணிக்கும் திரு அவையாக நான் காண விரும்புகிறேன்' என்பதாகும். அந்த இலட்சிய கனவை அவர் நிச்சயமாக விண்ணகத்திலிருந்து

காண்பார் என்று நான் நம்புகின்றேன். அதற்கான முயற்சிகள் நடைபெறும் என்றும் நம்புகின்றேன். இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் காண விரும்பிய, சமத்துவ திரு அவை, இணைந்து பயணிக்கும் திரு அவை, பங்கேற்கும் திரு அவை அமைய நம்மால் இயன்ற முயற்சிகள், இறைவேண்டல் செய்ய வேண்டும். புனித யாக்கோபு மிகுந்த வேதனையோடு தொடக்க காலத் திரு அவையிலே நடந்த ஏற்றத்தாழ்வு நிகழ்வுகளை எழுதி இருக்கிறார் (யாக் 2:1-10). திரு அவையில் அதிகாரம் செலுத்துவோர்- அடிபணிவோர், ஆதிக்க மனநிலை -அடிமை மனநிலை, திருநிலையினர் - பொதுநிலையினர், உயர்ந்தோர் - தாழ்ந்தோர், பணக்காரர்- ஏழை, படித்தோர்-பாமரர், உயர்ந்த சாதி- தாழ்ந்த சாதி, ஆண்கள்-பெண்கள் போன்ற வேறுபாடுகளும் மொழி, இன வேறுபாடுகளும் அடிமைத்தனங்களும் ஒழிக்கப்பட்டு, அழிக்கப்பட்டு திருமுழுக்கு பெற்ற அனைவரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றே. என்றும் அனைவரும் கிறிஸ்துவுக்குள் சமம் என்பதுதான் நம் திரு அவையின் நம்பிக்கையும் கொள்கையும், இலட்சிய நோக்கமும் ஆகும்.

நம் திரு அவையில் உள்ள மறைமாவட்டங்கள், பங்குகள், நிறுவனங்கள் போன்றவைகளில் மேலே சொல்லப்பட்டுள்ள வேறுபாடுகள், சமத்துவமின்மை, ஒன்றிப்பின்மை காணப்பட்டால் அது கடவுளுக்கு மிக மிக எதிரானது. துணிந்து கடவுளை எதிர்க்கிறோம். இணைந்து பயணிக்கும் திரு அவையின் நம்பிக்கையும் கொள்கையுமான இந்த ஒன்றிப்பை தங்களிலும் திரு அவையிலும் ஏற்படுத்த தியாகத்தோடு துணிச்சலோடு அனைத்து சவால்களையும் கடந்து பயணிக்கிறவர்களே எதிர்நோக்கின் திருப்பயணிகள்.

நீங்கள் மற்றவர்களை விட உயர்ந்தவர்கள் என்று சொன்னவர் யார்? உங்களிடம் உள்ள அனைத்தும் நீங்கள் பெற்றுக் கொண்டவை தானே. பெற்றுக் கொண்டும் பெற்றுக் கொள்ளாதது போல் பெருமை பாராட்டுவது ஏன்?(1கொரி 4:7) என்று புனித பவுலடியார் கலங்கடிக்கிறார். எந்த விதத்தில் திரு அவையில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற நிலை வந்தது? கடவுளே தன்னை வெறுமையாக்கி தாழ்த்திக் கொண்டாரே? (பிலி 2:6) பாதங்கழுவினாரே? நான் கடவுள், நான் கடவுள் என்று அதையே பிடித்து தொங்கிக் கொண்டிருக்கவில்லையே. எங்கிருந்து வந்தது இந்த வேறுபாடுகள். கிபி 1965 களில் விடுக்கப்பட்ட அறைகூவலுக்கு இன்னும் பதில் செயல்பாடு செய்வதில் தயக்கம் காட்டுவதேன்? இயேசு கிறிஸ்து ஆண்டவரின் போதனைகளால் ஈர்க்கப்பட்ட பலரில் (பிற சமயத்தவர்கள்) மகாத்மா காந்தி, அம்பேத்கார், மிகச் சிறந்த துறவி சுவாமி விவேகானந்தர் போன்றவர்கள் தங்களை நம் திரு அவையில் இணைத்துக் கொள்ளாததன் காரணம் என்ன?

திரு அவையின் ஒவ்வொரு உறுப்பினரும் அதாவது திருமுழுக்கு பெற்ற ஒவ்வொருவரும் தன்னை சுய ஆய்வு செய்து மனம் திருந்த வேண்டும். இல்லையென்றால் நாம் திருத்தப்படப்போவது வெகு தூரத்தில் இல்லை.

இன்றைய உலகில் திரு அவை ஏடு 'எவ்வித விதிவிலக்குமின்றி அடுத்திருப்பாரை தம் மறு உருவாக கருத வேண்டும். அடுத்திருப்பவரது வாழ்வு மாண்புறும் வகையில் அதை வாழ்வாக்கிட தேவையான வழிவகைகளை கருத்தில் கொள்ள வேண்டும்' என்று ஆணித்தரமாக எடுத்துரைக்கிறது. 'இனி உங்களிடையே யூதர் என்றும் கிரேக்கர் என்றும் அடிமைகள் என்றும் உரிமை குடிமக்கள் என்றும் இல்லை. ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை. இயேசு கிறிஸ்துவோடு இணைந்துள்ள நிலையில் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள் (கலா 3: 28 )என்றும் 'இதில் யூதர் என்றோ கிரேக்கர் என்றோ வேறுபாடு இல்லை. அனைவரும் ஆண்டவரில் ஒருவரே (உரோ10:12) என்றும் புனித பவுலடியார் முழக்கம் இடுகிறார். தினத்தந்தி இதழின்

தலையங்கத்தின் படி இந்தியாவில் 4,347 சாதிகள் இருப்பதாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த வேறுபாடுகள் அனைத்தும் நம் திரு அவையில் இல்லை என்று நம்மால் திறந்த மனதோடு உறுதியாகச் சொல்ல முடியுமா? இந்தியாவின் பாவமான அந்த முடைநாற்றமெடுக்கும் வேறுபாடுகள் நம்மில் இல்லை என்று உறுதியாக சொல்ல முடியுமா? இந்த ஏற்றத்தாழ்வு எங்கிருந்து வந்தது? இப்படி ஏற்றத் தாழ்வுகளோடு 'சமத்துவமின்மை' என்ற எதிர்க்கிறிஸ்துவின் பண்பை தாங்கிக் கொண்டு, ஒன்றிப்பற்ற வாழ்வு வாழ்ந்து கொண்டு எப்படி இணைந்து பயணிக்கும் திரு அவையாகச் செயல்பட முடியும். இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கம் திரு அவையில் காணப்படும் ஆதிக்க மனநிலையில் இருந்தும், செயல்பாடுகளில் இருந்தும் அடிப்படை மாற்றம் காண அழைப்பு நல்கியது .திருத்தந்தை பிரான்சிஸ் திருஅவையில் ஆதிக்க மனநிலை புற்றுநோய் போல் பரவி இருக்கிறது என்று எச்சரித்தார். சமத்துவ இறையியல் நடைமுறைக்கு வந்துள்ளதா? சிந்திப்போம். அடிப்படையே ஆட்டம் காணும் போது எதிர் நோக்கின் திருப்பயணிகளாக எப்படி பயணிக்க முடியும்? சிந்திப்போம் அதற்கான முயற்சிகளும் இறை வேண்டலும் முன்னெடுக்கப்பட வேண்டும். மிகவும் துரிதமாக முன்னெடுக்கப்பட வேண்டும் .அதற்காக ஒருவர் ஒருவருக்காக இறைவேண்டல் செய்வோம்

நம்பிக்கை உறவிலும் பணியிலும் உங்களோடு பயணிக்கும்

உங்கள் சகோதரன்

**நற்பணி அ. சகாயராஜா**

## மே 2025 புதிய பணியாளர்கள் பயிற்சி

⊙ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - I பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் 4.05.2025 அன்று நடைபெற்றது. 5 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி A. சத்தியேந்திரன், நற்பணி K. ஜஸ்டீன் கபிரியேல், நற்பணி A. யூஜின் அமல்ராஜ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

⊙ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - II காளையார்கோவில், தந்தை ஜோசப் சேவியர் அரங்கில் 4.05.2025 அன்று நடைபெற்றது. 9 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி G.M.S. ராணி, நற்பணி P. சகாயராணி, நற்பணி V. செங்கோல்மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

⊙ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - III தங்கச்சிமடம், புனித குழந்தை தெரசாள் கோவிலில் 10.05.2025 அன்று நடைபெற்றது. 3 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி X. லூர்துமேரி, நற்பணி S. மோட்ச அலங்காரம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

⊙ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - IV இராமநாதபுரம், புனித செபமாலை அன்னை ஆலயத்தில் 11.05.2025 அன்று நடைபெற்றது. 3 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி G.M.S. ராணி, நற்பணி A பிரான்சிஸ் சேவியர் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

⊙ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - V சிவகங்கை, வியான்னி அருள்பணி மையத்தில் 11.05.2025 அன்று நடைபெற்றது. 5 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை M. சகாயமேரி, நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி M. லூயி ஜான்போஸ்கோ ஆகியோர் வழிநடத்தினார்கள்.

⊙ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - VI ஓரியூர் புனித அருளானந்தர் திருத்தலத்தில் 11.05.2025 அன்று நடைபெற்றது. 2 பேர் கலந்து

கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. அருள் இளங்கோ, நற்பணி S. பால்ராஜ் நற்பணி இரா. அருள்பிரகாசம், ஆகியோர் வழிநடத்தினார்கள்.

- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - VII அமைதியகம், காயாவயலில் 18.05.2025 அன்று நடைபெற்றது. 8 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை Sr. பச்சை ஜோதி, நற்பணி S. சத்தியேந்திரன், நற்பணி P. அமலோற்ப ஆரோக்கிய ராணி ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VIII சாயல்குடி, புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் 18.05.2025 அன்று நடைபெற்றது. 8 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M. மரிய கிரகோரி, நற்பணி M.அருள்மரிய நாயகம், நற்பணி T. ஸ்டீபன் ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - IX இராசசிங்கமங்கலம், தூய ஆவியார் ஆலயத்தில் 25.05.2025 அன்று நடைபெற்றது. 14 பேர் கலந்து கொண்டனர்.இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி A. ஆரோக்கியமேரி, நற்பணி S. தைனேஸ்மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- தஞ்சை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - X திருமயம், புனித அடைக்கலமாதா ஆலயத்தில் 25.05.2025 அன்று நடைபெற்றது. 20 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி S. சகாயராணி, நற்பணி S. பால்ராஜ், ஆகியோர் வழிநடத்தினார்கள்

## மே 2025   கடந்த மாதச் செயல்பாடுகள்

- 07.05. 2025 அன்று காயாவயல் அமல அன்னை அமைதியகத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 27 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி வியாகுலம், நற்பணி விசுவாசம், நற்பணி அமலோற்ப ஆரோக்கிய ராணி, நற்பணி அருள்மேரி ஆகியோர் வழிநடத்தினர்கள்.
- 07.05.2025 அன்று பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 65 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி GM.S. ராணி, நற்பணி K.M. ஜான், நற்பணி J.சார்லஸ் ஆகியோர் வழிநடத்தினர்கள்.
- 10.05. 2025 தஞ்சாவூர் மறைமாவட்டத்தில் புதிய பணியாளர்கள் அறிமுகப் பயிற்சி அமர்வு தஞ்சை ஆயர் தலைமையில் தஞ்சாவூர் அருள்பணி மையத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியில் தஞ்சை மறைமாவட்டத்தை சார்ந்த பல பங்குகளிலிருந்து 235க்கும் மேற்பட்ட பொதுநிலையினர் கலந்து கொண்டார்கள். இப்பயிற்சியை சிவகங்கை மறைமாவட்டப் பணியாளர்கள் நெறிப்படுத்தினார்கள்.
- 16.05.2025 அருள்சான்று நிலையத்தில் பணியாளர்கள் கூடுகை திட்டமிடல் கூட்டம் நடைபெற்றது.
- 16&17.05.2025 ஆகிய நாட்களில் அருள்சான்று நிலையத்தில் திரு இசைப் பயிற்சி நடைபெற்றது . இதில் 35 பேர் கலந்து கொண்டார்கள்.
- 22.5.2025 அன்று சாயல்குடி பங்கில் மேலமுந்தல் கிராமத்திற்கு முத்துப்பேட்டை பணியாளர்கள் நற்பணி மார்க்கஸ், நற்பணி தயேதயுஸ் அவர்கள் தொடர்களப்பணியாற்றினார்கள்.
- 24 & 25.5.25 ஆகிய தேதிகளில் 10 இடங்களில் சிவகங்கை மறைமாவட்டத்தில் இணம் காணப்பட்டவர்களுக்கான அறிமுகப்பயிற்சி நடைபெற்றது.

நற்செய்திப் பணிக்குழுவின்
இணைய தளம் www.arulchandrunilayam.org

'எந்நிலையிலும் நம்பிக்கையென்னும் கேடயத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள் அதைக் கொண்டு தீயோனின் தீக்கணைகளையெல்லாம் அணைத்து விட முடியும் (எபே 6:16).

இவ்வுலக வாழ்வின் வெற்றிக்கும் ஆன்மீக வாழ்வின் வெற்றிக்கும் ஊன்றுகோலாக இருப்பது நம்பிக்கையே. இவ்வுலக வாழ்வின் வெற்றிக்கு தன்னம்பிக்கையும் ஆன்மீக வாழ்வின் வெற்றிக்கு இறை நம்பிக்கையும் அடிப்படையாக உள்ளன. இறை நம்பிக்கை தான் தன்னம்பிக்கையை ஊக்குவித்து வளர்க்கின்றது. 'நம்பினோர் கெடுவதில்லை' என்பது உலக வழக்கு.

'கிறிஸ்து தான் திருச்சட்டத்தின் நிறைவு. அவர் மேல் நம்பிக்கை கொள்ளும் எவரும் கடவுளுக்கு ஏற்புடையவர் ஆவார்' (உரோ10:4). கடவுளுக்கு ஏற்புடையவராக வாழ்வதற்கு அவர் மேல் நம்பிக்கை கொண்டு வாழ வேண்டும். அவர் இருக்கிறார் நம்மிலும் செயலாற்றுகிறார், நமக்குள்ளும் அவர் விரும்பும் மாற்றத்தைக் கொண்டு வருகிறார் என்பதை நாம் உள்ளூற நம்ப வேண்டும். அதை அறிக்கை செய்ய வேண்டும். இயேசு ஆண்டவர் தந்தை தன்னோடு இருக்கிறார் என்பதை உள்ளூர நம்பி வாழ்ந்தார். அவர் இவ்வுலகில் கடவுள் தன்மையில் அல்ல மனிதத் தன்மையில் தான் வாழ்ந்தார். ஆனால் தந்தை தன்னோடு இருப்பதை உணர்ந்தார். அனுபவித்தார். அதனால் தான் தந்தைக்குரிய காரியங்களை அவரால் இயல்பாகச் செய்ய முடிந்தது. 'நான் தந்தையுனுள்ளும் தந்தை என்னுள்ளும் இருப்பதை நீ நம்புவதில்லையா? நான் உங்களுக்கு கூறியவற்றை நானாகக் கூறவில்லை. என்னுள் இருந்து கொண்டு செயலாற்றுபவர் தந்தையே' (யோவா14:10). இது எவ்வளவு ஆழமான நம்பிக்கை அறிக்கை என்று சிந்தித்துப் பார்ப்போம். இத்தகைய நம்பிக்கையை நம் ஆண்டவர் நம்மிடமும் எதிர்பார்க்கின்றார். 'நான் தந்தையுள்ளும் நீங்கள் என்னுள்ளும் நான் உங்களுள்ளும் இருப்பதை அந்நாளில் நீங்கள் அறிந்து கொள்வீர்கள்' (யோவா 14:20). ஆண்டவர் இயேசு தந்தையுடன் இருப்பது போல் நாமும் அவருக்குள் இருக்கிறோம், அவர் நமக்குள் நம்மோடு இருக்கிறார் என்பதை நம் ஆன்மாவில் நம்பி அனுபவித்து வாழ வேண்டும். என்னுள் என்னோடு அவர் இருக்கின்றார் என்பதை நாம் நம் உள்ளத்தில் நம்பி வாழும் போது நம் சிந்தனை, பேச்சு, செயல், நடத்தை இவை அனைத்திலும் உலக வாழ்வை மையமாகக் கொண்டு இல்லாமல் மேலுலகு சார்ந்தவற்றை மட்டுமே நாடுவோம். ஏனென்றால், அலகை இவ்வுலகக் கவர்ச்சிகள் என்னும் தீக்கணைகளைத்தான் நம்மை நோக்கி வீசிக் கொண்டிருக்கின்றான். அலகை நாம் விழிப்பாக இல்லாத நேரத்தில் பல தீக்கணைகளை நம் மீது வீசித் தாக்குதல் நடத்துவான். அப்போது நம்மிடம் செயலாற்றும் நம்பிக்கை என்னும் கேடயத்தைப் பயன்படுத்தித்தான் அவனது தீக்கணைகளை எதிர்த்து நிற்க முடியும். ஏனெனில் உலகை வெல்லுவது நமது நம்பிக்கையே (1யோவா 5:4)

'இதோ உலகம் முடிவுவரை என்னாளும் நான் உங்களுடன் இருக்கின்றேன்' (மத்28:20) என்று கூறிய இயேசு ஆண்டவர் நம்பிக்கைக்கு உரியவர். எனவே அவர் சொல்லிச் சென்றபடி உலக முடிவு வரை நம்மோடு இருக்கின்றார். நமக்குள் செயலாற்றுகின்றார் என்ற நம்பிக்கையில் நாம் வலுப்பெற வேண்டும். கடவுள்

நம்மோடு இருக்கும்போது நமக்கு எதிராக அலகையோ மனிதரோ என்ன செய்துவிட முடியும் (உரோ 8:31) என்ற நம்பிக்கை நமக்கு வேண்டும். நம்பிக்கை தொலைதூரத்தில் தெரியும் கலங்கரை விளக்கு போன்றது. கடலில் இரவு நேரத்தில் திசை தெரியாமல் கரை தெரியாமல் கலங்கித் தவிப்போரில் கண்களில் படும் கலங்கரை விளக்கின் ஒளிதான் அவர்களை கரையில் சேர்க்கும். அதுபோல நம் ஆவிக்குரிய வாழ்வில் நாம் தொலைந்து தூரம் போன வேளைகளில் ஆண்டவர் உலகம் முடிவுவரை நம்மோடு இருக்கிறார் என்று சொல்லி இருப்பதை நம்ப வேண்டும். இந்த நம்பிக்கை கலங்கரை விளக்காக நம்மைக் கரை சேர்க்கும். ஒவ்வொரு நாளும் நம் நம்பிக்கையை அறிக்கை செய்யப் பழகிக் கொள்ள வேண்டும். கடவுள் மீது ஆழ்ந்த நம்பிக்கை யில்லை என்றால் நம் ஆவிக்குரிய வாழ்வு ஆட்டம் கண்டுவிடும். நம் வாழ்வின் ஒவ்வொரு கட்டமும் கடவுளின் கையில் உள்ளது (திபா31:15) என்பதை நம்ப வேண்டும். அதனால் நம் வாழ்வில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வும் நாம் கடந்து வரும் ஒவ்வொரு நிலையும் அவரது கரத்தில் உள்ளது என்ற உறுதியான மனநிலை நமக்கு வேண்டும். அப்போது நமது உள்ளம் நிலை குலையாது. நம்பிக்கை குறைபாடு நமக்குள் வராது.

நம் வாழ்வில் எதையாவது ஒன்றை அடைய நினைக்கும் போது இது நடக்குமா? நடக்காதா? என்ற நாணல் மனநிலை நமக்கு இருக்காது. ஆண்டவர் இருக்கின்றார் அதுவும் என்னை காண்கின்றவராய் இருக்கின்றார் என்ற உறுதியான நம்பிக்கையில் வெற்றி வாழ்க்கை வாழ்ந்த விவிலிய மாந்தர்கள் பலரின் வரலாற்றைப் படித்திருக்கின்றோம். எனவே நம்பிக்கையைத் தொடங்கி நம்மை வழி நடத்துகின்ற கிறிஸ்து இயேசுவின் மீது கண்களைப் பதிய வைப்பதன் மூலம் நம்பிக்கையென்னும் கேடயத்தை இறுகப்பற்றிக் கொண்டு சாத்தான் நம்மை நோக்கி ஏவும் தீக்கணைகளை பாதி வழியிலேயே முறியடித்து ஆவிக்குரிய வாழ்வில் வெற்றி வாகை சூடுவோம்.

நற்பணி **ச.சகாயராணி,** இராம்நகர்.

# ஆடுகளுக்கு வாயில் நானே

மறைநூலில் எழுதியுள்ளவாறு கிறிஸ்து நம் பாவங்களுக்காக இறந்தார். (1 கொரி 15:3)

ஆண்டவர் இயேசுவின் உயிர்த்தெழுதல் நம் அனுபவமாக இருந்தால் நாம் கடவுளின் பிள்ளைகளாக இருப்போம். அந்த அனுபவத்தை நாம் பெறவில்லையெனில் ஆண்டுக்கு ஒரு முறை உயிர்த்தெழுதலின் விழாவைக் கொண்டாடிவிட்டு பிறகு அவரை மறுதலிக்கின்ற உலக மனிதர்களைப் போலவே நாமும் இருப்போம். இயேசு இறந்தார் என்பதை நம் நாட்டுப் பிரதமர் அறிவார். உரோமை அரசாங்கம் அறிந்திருந்தது. அரசாங்கத்தின் அதிகாரிகள் அறிந்திருந்தார்கள். மதத் தலைவர்கள் அறிந்திருந்தார்கள். இன்னும் பலர் அவர் சிலுவையில் தொங்கியதைக் கண்டு அவரை ஏளனம் செய்தனர். அவரை உரோமையர்களும் யூதர்களும் சேர்ந்து கொன்றுவிட்டார்கள் என்பது உலகத்தாரின் எண்ணம். ஆனால், அது சரியானது அல்ல. அவர் நம் பாவங்களுக்காக இறந்தார் என்பதான் உண்மைச் செய்தி. ஏனெனில் அவரை

யாரும் பிடித்து கொன்று விட முடியாது. அவரைப் பிடிக்க வந்தவர்களிடம் நான்தான் என்று ஆண்டவர் சொன்னபோது அவர்கள் அனைவரும் தரையில் விழுந்தார்கள் (யோவா 18:6). அதுபோல பிலாத்து உன்னை விடுதலைச் செய்யவும் எனக்கு அதிகாரம் உண்டு . உன்னை சிலுவையில் அறையவும் எனக்கு அதிகாரம் உண்டு என்றார். அதற்கு ஆண்டவர் மேலிருந்து அருளப்படாவிட்டால் உனக்கு என் மீது எந்த அதிகாரமும் இராது என்றார் (யோவா 18:10-11). தந்தையின் திருவுளப்படியே அவர் நம் பாவங்களுக்காக இறந்தார். அவரது இறப்பு ஏதோ எதிர்பாராத விதமாக திடீரென்று நடந்த ஒரு நிகழ்வு அல்ல. உலகம் தோன்றும் முன் குறிக்கப்பட்ட அவர் இந்த கடைசி காலத்தில் உங்களுக்காக வெளிப்படுத்தப்பட்டார் (1 பேது 1:20). காலங்களுக்கு முந்திய தமது தீர்மானத்தின்படி கிறிஸ்து இயேசு வழியாக நமக்கு அளிக்கப்பட்ட அருளின்படி நம்மை மீட்டுள்ளார் (2 திமொ 1:9). இந்நிலை வாழ்வை பொய் கூறாத கடவுள் காலங்கள் தொடங்குமுன்னே வாக்களித்தார் (தீத் 1:3). நாம் மேன்மை பெறவேண்டும் என்னும் நோக்குடன் உலகம் தோன்று முன்னரே கடவுளின் திட்டத்தில் இருந்தது (1 கொ 2:7). இந்த மறை உண்மைகளைத் தெளிவாகப் புரிந்து கொண்டதால்தான் புனித பவுல் நான் பெற்றுக்கொண்டதும் முதன்மையானது எனக் கருதி உங்களிடம் ஒப்படைத்ததும் இதுவே.

மறைநூலில் எழுதியுள்ளவாறு கிறிஸ்து நம் பாவங்களுக்காக இறந்து அடக்கம் செய்யப்பட்டார். மறைநூலில் எழுதியுள்ளவாறே மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்பட்டார் (1கொரி 15:3). ஆண்டவர் இயேசு தன்னைப் பற்றி எழுதியுள்ளதை அடிக்கடி அவர்களுக்கு நினைவுபடுத்தினார். மறைநூல் வழியாக நிலைவாழ்வு கிடைக்கும் என எண்ணி அதனைத் துருவித் துருவி ஆய்ந்து பார்க்கிறீர்களே அம்மறைநூலும் எனக்குச் சான்று பகர்கின்றது என்றார் (யோவா 5:39). மோசேயின் சட்டத்திலும் இறைவாக்கினர்கள் நூல்களிளும் திருப்பாடல்களிலும் என்னைப் பற்றி எழுதப்பட்டுள்ள அனைத்தும் நிறைவேற வேண்டும் என்று நான் உங்களோடு இருந்தபோதே உங்களுக்குச் சொல்லியிருந்தேனே என்றார் (லூக் 24:44). எனவேதான் பவுல் மறைநூலில் எழுதியுள்ளவாறு நம் பாவங்களுக்காக இறந்தார். மறைநூலில் எழுதியுள்ளவாறே மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்பட்டார் என்பதை வலியுறுத்திக் கூறுகிறார். இரண்டு முறை இந்த வார்த்தைகள் வருகின்றன. நற்செய்தியினுடைய அனைத்து மாண்பும் மாட்சியும் இந்த மூன்று வாக்குகளுக்குள் அடங்கியிருக்கிறன்றன. நம் ஆண்டவர் வந்ததே நம் பாவங்களுக்காக இறப்பதற்கு இதை நான் என் வாழ்வில் கண்டு கொண்டேன். அதையே நான் உங்களுக்கும் அறிவிக்கிறேன் என்று தமஸ்க்கு நகருக்கு போகும் வழியில் உயிர்த்த ஆண்டவரை சந்தித்த அனுபவத்தை அப்படியே விளக்குகிறார். மீட்பின் வரலாற்றில் அதை ஒவ்வொருவரு பெற்றுக்கொள்ள ஒரு ஒழுங்கு இருப்பதை மிகத் தெளிவாக விளக்குகிறார்.

நான் உங்களுக்கு அறிவித்த நற்செய்தியை நீங்கள் உறுதியாகப் பற்றிக் கொண்டிருந்தால் அதன் வழியாக மீட்பு அடைவீர்கள். இல்லையேல் நீங்கள்

கொண்டிருக்கும் நம்பிக்கைப் பொருளற்றதே (1 கொரி 15:2). சிலுவையில் இருந்த ஆண்டவரை பலர் கண்டனர். ஆனால் உயிர்த்த ஆண்டவரை அவர்களால் காண முடியவில்லை. அவர் யாருக்குத் தன்னை வெளிப்படுத் விரும்பினாரோ அவர்கள் அவரைக் கண்டனர். பல தெளிவான சான்றுகளால் தாம் உயிரோடு இருப்பதைக் காண்பித்தார் (திப 1:3). அவர் கேபாவுக்கும் அதன்பின் பன்னிருவருக்கும் தோன்றினார். ஐநூறுக்கும் மேற்பட்ட சகோதர சகோதரிகளுக்கு ஒரே நேரத்தில் தோன்றினார். எல்லாருக்கும் கடைசியில் காலம் தப்பிப் பிறந்த குழந்தை போன்ற எனக்கும் தோன்றினார் (1 கொரி 5:6-8) என்று தமஸ்க்கு நகருக்குச் செல்லும் வழியில் உயிர்த்த ஆண்டவரைச் சந்தித்த அனுபவத்தை இங்கு குறிப்பிடுகிறார். திருச்சட்டத்திற்கு அடிமையாக இருந்த அவர் கட்டளை தந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு பாவம் என்னை ஏமாற்றி அந்த கட்டளை வழியாகவே என்னைக் கொன்றுவிட்டது என்று கதறினார் (உரோ 7:11). ஆனால் உயிர்த்த ஆண்டவரைச் சந்தித்தப் பின்பு சாவே உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே? பாவமே சாவின் கொடுக்கு. பாவத்துக்கு வலிமை தருவது திருச்சட்டமே. ஆகவே நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக நமக்கு இந்த வெற்றியைக் கொடுக்கும் கடவுளுக்கு என்றும் நன்றி என்று கூறுகிறார் (1 கொரி 15:54-58). பாவத்துக் எதிராயிருந்த இருந்த அலகையின் செயல்களை அளித்து ஆண்டவர் வெற்றி பெற்று விட்டார். அந்த வெற்றியை பவுல் அவருடையதாக அவருக்காகக் கிடைத்த வெற்றியாகப் பார்க்கிறார். எனவேதான் நான் பெற்றுக் கொண்டதும், முதன்மையானவை எனக் கருதி உங்களிடம் ஒப்படைத்ததும் இதுவே. மறைநூலில் எழுதியுள்ளவாறே கிறிஸ்து எனக்காக இறந்தார் என்பதை உறுதிபடுத்துகிறார். பவுல் தான் பெற்றுக்கொண்ட உயிர்த்த ஆண்டவரின் அனுபவத்தை ஆண்டவரைத் தேடுகிற ஒவ்வொருவரும் பெற்றுக் கொண்டு அதை அவரைப் போல உறுதிபட மற்றவருக்கு எடுத்துச் சொல்லி சான்று பகர வேண்டும் என்பதே அவரது விருப்பம். பல ஆண்டுகளாகப் பணியாளர்களாகத் தொடரும் நமது அனுபவம் எவ்வாறு உள்ளது? புது வாழ்வு பெற்றவர்களாய் வாழும்படி திருமுழுக்கின் வழியாக அவரோடு அடக்கம் செய்யப்பட்டிருக்கிறோம் (உரோ 6:4).

இந்த உண்மையை ஒவ்வொரு நாளும் நாம் உணரும்போது பவுலைப் போல நானோ நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் சிலுவையையன்றி வேறு எதைப் பற்றியம் ஒரு போதும் பெருமைப் பாராட்ட மாட்டேன். அதன் வழியாகவே என்னைப் பொருத்த வரையில் உலகம் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது. உலகைப் பொருத்தவரையில் நானும் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன். முழு உலகமும் தங்களின் பாவங்களுக்காக நான் சிலுவையில் அறையப்பட்டிருப்பதுபோல அனைவரும் சிலுவையில் அறையப்பட்டு தங்களின் பாவங்களிலிருந்து மீட்புப் பெற வேண்டும் என்ற தனது உன் மன ஆழத்தில் இருக்கும் ஏக்கத்தை இங்கு வெளிப்படுத்துகிறார் (கலா 6:14). எனவே நாமும் மறைநூலில் எழுதியுள்ளவாறே கிறிஸ்து எனக்காக இறந்தார். உயிர்த்தார் என்பதை நம்புவோம். உள்ளத்தில் உணர்வோம். பவுலைப் போல பிறருக்குத் தெளிவான முறையில் எடுத்துரைத்து சான்று பகர்வோம்.

நற்பணி **ம.விசுவாசம்,** செஞ்சை.

# இறையாட்சி

மனிதன் உலகை ஆளும்படிப் படைக்கப்பட்டிருந்தாலும் (தொநூ 1:28) பாவத்தின் காரணமாக அவன் அதை இழந்துவிட்டான். மனிதனின் ஆளுமையை அலகை அபகரித்துக் கொண்டது (லூக் 4:6-7, யோவா 14:30). ஆகவே, இந்த உலகத்தை சாத்தானிடமிருந்து மீட்கவே வார்த்தையான இறைவன் விண்ணுலகிலிருந்து மண்ணுலகிற்கு இறங்கி வந்தார். ஆகவேதான், இறையாட்சி உங்களிடையே வந்துள்ளது என்று இயேசு கூறுகிறார். 'நான் கடவுளின் ஆவியைக் கொண்டே பேய்களை ஓட்டுகிறேன் என்றால் இறையாட்சி உங்களிடம் வந்துள்ளது அல்லவா?' (மத் 12:28, லூக் 11:20, 17:2). அவரது ஆளுகை உள்ள இடமும் இறையாட்சிதானே.

ஒரு மனிதன் இறைச்சமூகத்தில் தன்னையே தாழ்த்தி ஒப்புக்கொடுத்து, மனந்திரும்பி, மறுபடியும் பிறந்து, மீட்படையும்போது அவரில் இறையாட்சி மலர்கிறது. அதாவது, அவருடைய இதய அரியணையில் இறைவன் அரசராக வீற்றிருந்து செயல்பட வேண்டும். அவருடைய எல்லாக் காரியங்களிலும் இறைவனின் ஆளுகை வரவேண்டும். கடவுளின் அருளின்றி எதுவும் நடப்பதில்லை என்ற மனநிலை உண்டாகும்போது இறையாட்சி அவருக்குள் வந்துவிட்டது என்று பொருள். இந்த ஆட்சி இயேசுவின்மீது வைத்த நம்பிக்கையின் மூலமாகக் கிடைக்கும் ஒரு ஆன்மீக அருள் கொடையாகும். இது இவ்வுலக ஆட்சி போன்றது அல்ல (யோவா 18:36). இது கண்களுக்குப் புலப்படும் முறையில் வராது (லூக் 17:20). இறையாட்சி என்பது தூய ஆவியார் அருளும், நீதி, அமைதி, மகிழ்ச்சி ஆகியவற்றையே அடிப்படையாகக் கொண்டது. அதாவது, கடவுளின் வல்லமை செயல்படுவதே இறையாட்சியாகும்.

> இறையாட்சியையும் இறைவனுக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். (மத் 6:33)

**கடவுளுக்கு ஏற்புடையவற்றை நாடுவது**

கடவுளின் விருப்பம் அறிந்து, அவருக்கு எது பிடிக்கும், அவர் எதை எதிர்பார்க்கிறார் என்பதைத் தெரிந்து செயல்படுவதே அவருக்கு ஏற்புடையவற்றை நாடுவதாகும். ஒரு தேர்வு எழுதும்போது எதெல்லாம் தெரியுமோ அதையெல்லாம் தேர்வில் எழுதக்கூடாது. தேர்வில் என்ன கேட்டு இருக்கிறார்களோ, அதற்கான பதிலைத்தான் எழுதவேண்டும். ஏனென்றால் தேர்வுத் தாளை திருத்துபவர் எதை எதிர் பார்க்கிறார், எதன் அடிப்படையில் மதிப்பெண் போடுவார் என்பதைப் புரிந்து கொண்டுதான் தேர்வு எழுத வேண்டும். அதுபோலக் கடவுளின் விருப்பத்திற்கு ஏற்ப செயல்பட வேண்டும். இதைப் புரிந்து கொண்ட தாவீது 'உமது திருவுளத்தை நிறைவேற்ற எனக்குக் கற்பித்தருளும்' (திபா 143:10) என்று வேண்டுகிறார். ஆகையால்தான், 'ஈசாயின் மகனான தாவீதை என் இதயத்துக்கு உகந்தவனாகக் கண்டேன். என் விருப்பம் அனைத்தையும் அவன் நிறைவேற்றுவான்' (திப 13:22) என்கிறார் ஆண்டவர். ஆகவே, ஆண்டவருக்கு ஏற்புடையவற்றை நாடுங்கள்.

ஆண்டவரை முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும் நாடும்போது கண்டடைவீர்கள் (இச 4:29) என்று மோசே கூறுகிறார். அவரது திருமுகத்தை இடையறாது நாடுகள் (திபா 105:4) என்கிறார் தாவீது. ஆண்டவரைக் காண்பதற்கு வாய்ப்புள்ளபோதே அவரை நோக்கி மன்றாடுங்கள் (எசா 55:6) என எசாயா ஆலோசனை கூறுகிறார். ஆண்டவர் வந்து உங்கள் மேல் நேர்மையைப் பொழியுமாறு நீங்கள் அவரைத் தேடும் காலம் நெருங்கி வந்துவிட்டது (10:12), என்கிறார் ஓசேயா. அவரை நாடுவோருக்கு நன்மை ஏதும் குறையாது (திபா 34:10). ஆகவே, அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள்.

எதை உண்போம்? எதைக் குடிப்போம்? எதை அணிவோம்? எனக் கவலை கொள்ளாதீர்கள். உங்களுக்கு இவையாவும் தேவை என உங்கள் விண்ணகத் தந்தைக்குத் தெரியும். அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். எல்லாம் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும் (மத் 6:33).

1) சாலமோன் அரசர் கடவுளுக்கு ஏற்புடைய ஞானத்தைக் கேட்டார். ஆனால், அதோடு அவர் கேளாத செல்வத்தையும் புகழையும் பெற்றுக்கொண்டார் (1 அர 3:13).

2) தன் சாவையும் பொருட்படுத்தாமல் எலியா என்கிற இறைவாக்கினருக்கு உணவு கொடுத்ததால் சரிபாத் விதவையின் வாழ்நாள் முழுவதற்கும் தேவையான ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டாள் (1 அர 17:12-16).

3) இராகாபு விலைமாதாக இருந்தும் தன்னைப் பற்றி கவலைப்படாமல் தூதர்களை சாளரம் வழியாக இறக்கி தப்புவித்து இறைத்திருவுளம் நாடியதால், இராகாபையும் அவர் தந்தையின் வீட்டாரையும் அவரைச் சார்ந்த அனைவரையும் யோசுவா உயிருடன் காப்பாற்றினார் (யோசுவா 6:25). கடவுளுக்கு ஏற்புடையவற்றை நாடுங்கள், அமது மாட்சியை காண்பீர்கள்.

**கடவுளின் மாட்சியைக் காண்பது**

நம்முடைய நற்செயல்களால் அல்ல. இயேசு கிறிஸ்துவின்மீது கொள்ளும் நம்பிக்கையின் வழியாகக் கடவுள் மனிதரைத் தமக்கு ஏற்புடையவராக்குகிறார் (உரோ 3:22). ஏனெனில், ஆபிரகாமின் நம்பிக்கையை ஆண்டவர் நீதியாகக் கருதினார். ஆகவே, நாம் செய்ய வேண்டியது நமக்காக யாவையும் செய்து முடித்த இயேசுவை நம்புவதே. நாம் இயேசுவை நம்பிவிட்டோம் என்றாலே இறையாட்சிக்குள் வந்துவிட்டோம் என்றுதான் பொருள்.

> இயேசுவை நம்பினால் கடவுளின் மாட்சியைக் காண முடியும். (யோவா 11:40)

கடவுள் நோவாவை நோக்கி 'நீ உன் குடும்பத்தார் அனைவரோடும் பேழைக்குள் செல் என்றார்' (தொநூ 7:1). பேழைக்குள் வந்துவிட்டபின் பேழையை யாரும் இயக்கவில்லை. காற்று (தூய ஆவியானவர்) பேழையை 'அராத்து 'மலைக்கு (விண்ணகம் ) கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டது. 'அராத்து' என்பது 'தூய இடம் என்று பொருள். இதே போல் இயேசு என்கிற பேழைக்குள் வந்துவிட்ட அனைவரையும் அவர் இறையாட்சிக்குள் கொண்டுபோய் நிறுத்திடுவார்.

நம்முடைய வேலை அவரை நம்புவதே நாம் என்னவெல்லாம் செய்து தந்தையிடம் ஒன்றை வாங்குவோமோ. அதையெல்லாம் நம்முடைய பெயரால் இயேசு செய்து முடித்துவிட்டார். நாம் பெற வேண்டிய அடியை அவர் வாங்கினார். நாம் பெற வேண்டிய தண்டனையை அவர் பெற்றார். 'மெய்யாகவே அவர் நம் பிணிகளைத் தாங்கி கொண்டார் நம் துன்பங்களைச் சுமந்து கொண்டார்' (எசா 53:4). ஆகவே. நமக்காக யாவையும் செய்துமுடிக்க 'கடவுள் அனுப்பியவரை நம்புவதே கடவுளுக்கேற்ற செயல்' (யோவா 6:29). இயேசுவிடம் நம்பிக்கைகொண்டு அவரை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் அவர் கடவுளின் பிள்ளைகள் ஆகும் உரிமையை அளித்தார் (யோவா 1:12). ஆகையால், இனி நீங்கள் அடிமைகளல்ல பிள்ளைகள்தாம் பிள்ளைகளாகவும் உரிமைப் பேறு உடையவர்களாகவும் இருக்கிறீர்கள். இது கடவுளின் செயலே (கலா 4:7). இயேசுவை நம்பினால் கடவுளின் மாட்சியைக் காணமுடியும் (யோவா 11:40). ஆகவே, அனைத்திற்கும் மேலான அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். எல்லாம் சேர்த்துக் கொடுக்கப்படும்.

நற்பணி **ஆரோக்கியசாமி.ஜே**

# வெற்றி தரும் எதிர்நோக்கு

ஒரு இளைஞன் சிறுவயதிலேயே போதை பழக்கத்திற்கு அடிமையானான். அவனின் பெற்றோர் அயல் நாட்டில் வேலை செய்தனர். அவனது இழிவான வாழ்க்கையைக் குறித்து எதுவும் அவர்களுக்குத் தெரியவில்ல. அவனது தவறான வாழ்க்கைத் தேவைகளுக்கான பணம் அயல் நாட்டிலிருந்து வந்து கொண்டிருந்தது. தனது பாட வகுப்புகளை விட, நண்பர்களையும், கொண்டாட்டங்களையும் பெரிதாக எண்ணினான். தேர்வுகளை அவன் பொருட்படுத்தவில்லை. பள்ளியிலிருந்து நீக்கிய போதெல்லாம் சாக்குப் போக்குகள் கூறி சமாளித்து வந்தான். பொறியியலின் படிப்பின் இறுதி ஆண்டிலும் அவன் கல்வியின் பக்கம் கவனம் செலுத்த வில்லை.

ஒரு நாள் இரவு அவன் தன் நண்பனுடன் குடி போதையில் மோட்டார் சைக்கிளில் சென்றான். போக்குவரத்து விதிகளை மீறி சென்ற அவர்கள் விபத்திற்கு உளாளானார்கள். பல நாள்கள் மருத்துவமனையில் நினைவின்றி கிடக்க நேர்ந்தது. நினைவு திரும்பிய பின் அந்த விபத்தில் நண்பன் இறந்த செய்தியை அறிந்த அவன் மிகவும் வருந்தினான். இனி வாழ வேண்டுமா ? என்ற கேள்வி அவனுள் எழுந்தது. நண்பனது இறப்பிற்கு காரணம் நான் அல்லவா? என்ற எண்ணம் அவனை உறுத்தியது மருத்துவ மனையில் அனைத்து உண்மைகளையும் ஒரு சகோதரியிடம் பகிர்ந்து கொண்டான். அவர் அவனுக்கு ஆறுதல் வழங்கி நம்பிக்கை வழங்கினர்.

மருத்துவமனையிலிருந்து வந்த பின் ஒரு தியானத்திற்கு சென்றான். அவன் தன்னைத் தானே குற்றப் படுத்திக் கொண்டிருந்தான். நிலையற்ற மனதுடன் பொருளற்ற வார்த்தைகளைப் பிதற்றிக் கொண்டே இருந்தான். போதை மருத்தின் தாக்கம் அவனை மிகவும் துன்புறுத்திக் கொண்டே இருந்தது.

தியான மையத்தில் அது கிடைப்பதற்கான வாய்ப்பு இல்லையாதலால் நடைபெற்ற நிகழ்வுகளில் முழுமையாய் பங்கேற்க இயலவில்லை.

ஆயினும் தியான கூடத்தில் இருப்பதை அவன் விரும்பினான். அப்போது இயேசுவின் வல்லமை அவனில் நுழையத் தொடங்கியதை உணந்தான். ஆனாலும் பழைய நினைவுகள் அவ்வப்போது அவனது வாழக்கை துன்புறுத்திக் கொண்டே இருந்தது. நற்கருணை ஆராதனையின் போது அவனிடம் ஏதோ ஒரு நம்பிக்கை வேரூன்றத் தொடங்கியது. தனது கடந்த கால வாழ்க்கையினால் அவன் அடைந்த தீமைகள் அனைத்தையும் நற்கருணையின் முன் அர்ப்பணிக்க அவனில் அரும்பிய நம்பிக்கை அவனுக்கு ஊக்கமுட்டியது. இறைவனைப் புகழத் தொடங்கினான். அப்போது தனது துன்ப துயரங்களை நீக்கி இயேசு தனக்கு புதிய வாழ்வை வழங்குறார் என்பதை உணர்ந்து அவன் பாவ அறிக்கைசெய்தான். பின் அவன் பழைய பாவ வாழக்கையை திரும்பிப் பார்க்க வில்லை. தற்பொழுது அவனுக்குள் இருக்கும் ஒரே ஆசை தீமைக்கு அடிமையான உலகிற்கு எதிர்நோக்கின் ஒளியை வீசச் செய்வ வேண்டுமென்பதே. நம் ஆண்டவர் இறந்த இயேசு கிறிஸ்துவை உயிர்த்தெழச் செய்து, நமக்குப் புதுப்பிறப்பளித்துள்ளார் (1பேது 1:3). உயிர்ப்பு எதிர்நோக்கின் மாபெரும் கொண்டாட்டமாகும். எதிர்நோக்கு ஒரு போதும் ஏமாற்றம் தராது (உரோ 5:5). சிலுவையில் பாவத்தின் மீது இயேசு பெற்ற வெற்றி வழியாகப் பெற்றுத் தந்த விடுதலை, நமக்கு வாழ வழி உண்டு என்ற எதிரிநோக்கை வழங்கி, மனிதர் அடிமைப்பட்டுக் கிடக்கும் இறப்பு கலாச்சாரத்தை மேற்கொள்ள உதவுகிறது.

இவ்வாறு வாழ்வின் பொருள் என்ன என்று தெரியாமல் சோர்ந்து போகும்போது இயேசு உயிர்ப்பு எதிர்நோக்கின் அடையாளமாகிறது.

உயிர்ப்பின் எதிர்நோக்கு ஒருபோதும் நம்மை கைவிடுவதில்லை. மாறாக வெற்றி வாழ்விற்கு அழைத்துச் செல்கிறது.

நற்பணி V.**செபஸ்டியன் தார்சிஸ்,** செஞ்சை.

## இது சாத்தியமா ?

என் வாழ்வில் துன்பம், போராட்டம், பிரச்சனை மட்டும் இல்லையேல் நான் எவ்வளவு மகிழ்ச்சியோடு வாழ்வேன் என்ற எண்ணம் எனக்குள் அடிக்கடி வந்து போவதுண்டு. ஆனால் வாழ்வில் துன்பம் என்பது இல்லாமல் இல்லை. துன்பத்தை நாம் ஒவ்வொருவரும் சந்தித்தே ஆக வேண்டும். இத்துன்பத்தை எதிர்கொள்ள திப13:45,50 திப 27:13-44, 2கொரி.11:23-29 பிலி1:12-14 யாக்1:2 உரோ.8:18 2கொரி4:16-18 1பேது4:13 போன்ற இறை வார்த்தைகளைத் தியானிக்க வேண்டும் என்று புத்துயிர் செபங்களிலும் தியானங்களிலும் உள்வாங்கி இருக்கிறோம். இந்த இறை வார்த்தைகளை செபநேரங்களில் கேட்கும்போது காதுக்கு குளிர்ச்சி தான்.

ஆனால்... ஆனால்... அத்துன்பம் நேரிடுகையில் நம்மால் மேற்சொன்ன இறை வார்த்தைகளை நிதானமாக அறிக்கையிட முடிகின்றதா?

முடியவில்லையே! பதட்டம், வெறுமை உணர்வு, ஏமாற்றம், நரம்பு வெடிக்கும் அளவுக்கு கோபக்கனல், நாவில் எழும் தீய வார்த்தைகள் மற்றும் பழிச்சொற்கள், தடுமாற்றம் என்ற ஏகப்பட்ட எதிர்மறை உணர்வுகளால் நிரம்பிவிடுகிறோமே!

இத்துன்ப கிண்ணத்தை எளிதாக கடந்து விட, நாம் என்ன அந்த அளவுக்கு பெரிய ஞானிகளா? நமது சொந்த ஆற்றல் மேல் நம்பிக்கை வைத்து துன்பத்தை கடந்து விட எண்ணும்போது உறுதியாக ஏமாற்றமே மிஞ்சும். இதுவே நமது அனுபவம். மாறாக தேற்றரவாளராம், ஆலோசகராம், உதவி செய்பவராம், பரிந்து பேசுபவராம், வழக்காடுபவராம், பலப்படுத்துகிறவராம், ஈடு செய்பவராம் தூய ஆவியானவரோடு பயணிக்கும் போது துன்பத்தை எளிதாக எதிர்கொள்வது சாத்தியமே!

-நற்பணி J.**அருள் இளங்கோ,** இராம்நகர்.

## ஒரு பணியாளரின் மன்றாட்டு



மானிட மகனை மண்ணில் அவதரிக்கச் செய்த ஆவியானவரே! ஆண்டிற்கு ஒரு முறை உமக்கு விழாக் கொண்டாடும் நாங்கள், நீர் எங்களில் உறைந்து இருக்கிறீர் (1 கொரி 6:19) என்பதை உணர்ந்து, இந்த உலகினர் கொண்டுள்ள தவறான கருத்துக்களை (யோ 16:8) மறுத்து, நீர் எங்களைத் தனிப்பட்ட பணிக்கென(திப 13:2) அழைத்திருக்கிறீர் என்பதைப் புரிந்து, கொடைகளுக்காக ஆசைப்படுகிறவர்களாக அல்லாமல், நீர் தரும் அன்புடன் கனிவாழ்வு வாழ்ந்து (கலா 5:22,23) நாங்கள் அனைவரும் ஒரே எதிர்நோக்குடன், ஒரே உடலாய் (1கொரி 12:13) வாழும் மனநிலை தர வேண்டும் என்று ஆவியாரே உம்மை மன்றாடுகிறேன்

# வட்டார தியானக் கூட்டம்

| வ.எ | தேதி | வட்டாரம் | தொடர்பாளர் |
|---|---|---|---|
| 1. | 14 | இராமேஸ்வரம்<br>9047998614 | நற்பணி M. மரியகிரகோரி<br>9486965799 |
| 2. | 14 | தங்கச்சிமடம்<br>9585998444 | நற்பணி M. சேவியர்<br>9442857812 |
| 3. | 14 | பாம்பன்<br>9790605049 | செயலர்<br>9787967272 |
| 4. | 15 | புளியால்<br>978749588 | நற்பணி M. விசுவாசம்<br>9442758641 |
| 5. | 15 | சருகணி<br>9943632636 | செயலர்<br>9787967272 |
| 6. | 15 | தேவகோட்டை<br>9095866732 | நற்பணி GMS. ராணி<br>9655264448 |
| 7. | 15 | இராஜசிங்கமங்கலம்<br>9843752061 | நற்பணி L. ஆரோக்கியசாமி<br>9150579311 |
| 8. | 15 | சாயல்குடி<br>6383152402 | நற்பணி S.A அல்போன்ஸ்<br>9994168051 |
| 9. | 22 | மானாமதுரை<br>9442857812 | நற்பணி A. தனிநாயகம்<br>9486037889 |
| 10. | 22 | இடைக்காட்டூர்<br>9442857812 | நற்பணி M. மரியகிரகோரி<br>9486965799 |
| 11. | 22 | ஆவுடைப்பொய்கை<br>8489703006 | நற்பணி J. ஆரோக்கியசாமி<br>8248899247 |

**இப்ப இல்லாட்டி எப்ப ?**
-எல்லாரோ

கண்ணாடியில் இருக்கும் அழுக்கு, நம் முகத்திற்குச் சொந்தமில்லை. நம்மைப்பற்றிய மற்றவரின் எண்ணமும் நமக்குச் சொந்தமில்லை.
அதைக்கருத்தில் கொள்ளவும் தேவையில்லை; கவலைப்படத் தேவையுமில்லை.

**இதை நாம் உணர்வது இப்ப இல்லாட்டி எப்ப?**

பிறர் என்ன சொல்வார்களோ என்று அஞ்சிக்கொண்டு நடப்பவர் கண்ணியில் சிக்கிக் கொள்வார்; ஆண்டவரை நம்புகிற வருக்கோ அடைக்கலம் கிடைக்கும். (நீதிமொழிகள் 29:25)

**வித்தியாசமான எண்களும் அத்தியாவசியமான இறைவார்த்தைகளும்**

| | |
|---|---|
| ஆண்டவர்க்கு அஞ்சுங்கள்; அதுவே ஞானம்;<br>தீமையை விட்டு விலகுங்கள்; அதுவே அறிவு. | **யோபு 28:28** |

'தந்தையிடமிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிற தூய ஆவியார் அவர் வரும்போது என்னைப் பற்றிச் சான்று பகர்வார். நீங்களும் சான்று பகர்வீர்கள்' (யோவா 15 :26). இவ்வார்த்தை இறை இயேசு தமக்குரியவர்களாய் தேர்ந்து கொண்ட தம் சீடர்களுக்கு அளித்த உறுதிமொழி.

தூய ஆவியாரின் பெருவிழாவை சிறப்பிக்கவிருக்கின்ற நாம் பேதுருவின் தலைமைத்துவம் பற்றியும் பெந்தகோஸ்து அனுபவம் தந்த விளைவுகள் பற்றியும் திருத்தூதர்களால் நற்செய்தி பறைசாற்றப்பட்ட நிகழ்வுகளையும் சற்றே நின்று திரும்பிப் பார்த்து தியானிப்போம்.

தூய ஆவியாரின் அருள்பொழிவிற்கு முன் பின் என்று இரண்டாக பிரித்துப் பார்த்தோமென்றால் இருவேறு முழுமையான வேறுபாடுகளை சீடர்களின் வாழ்விலும் பணியிலும் பண்புகளிலும் தெளிவாக வெளிப்படுவதைக் காணலாம்.

**பேதுருவின் தலைமைத்துவம் :**



ஆண்டவரையும் அவரது செயல்பாடுகளையும் அவரது திருவுளத்தையும் அறிந்து கொண்டவர்களை தமக்குகந்த முறையில் தமது இறையாட்சிப் பணியின் தலைமையில் அமர்த்தி செயலாற்ற வைக்கிறார் என்பதை பேதுருவின் வாழ்விலிருந்து அறிந்து கொள்ளலாம்.

இயேசுவை பின்பற்றி சீடராக விரும்பிய செல்வந்தரிடம் விண்ணரசிற்கு எது வழி என்பதை கூட்டிக் காட்டியிருக்கிறார் நம் தெய்வம். பிறரன்பும் பகிர்தலும் தியாகமுமே விண்ணரசுக்கான திறவுகோல் என்று இயேசு விளக்கியதைக்கேட்டு "பாரும், எங்கள் உடமைகளை (உறவுகளை) எல்லாவற்றையும் விட்டுவிட்டு நாங்கள் உம்மை பின்பற்றினோமே என்று தமக்கு இவ்வுலகில் என்ன கிடைக்கும்" என்று ஆதங்கத்தோடு இவ்வுலகம் சார்ந்த ஆசிர்வாதத்தை எதிர்பார்த்தவரிடம் மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டேயிருந்தன. இயேசு மட்டுமே உண்மைக் கடவுள்

வாழும் மெசியா. வாழும் கடவுளின் மகன்' (மத் 16:16) என்பதனை முழு நம்பிக்கையோடு அறிக்கையிட்ட போது இயேசுவால் தலைமைப் பதவிக்கு நியமிக்கப்படுகின்றார். 'நான் உனக்கு கூறுகிறேன். உன் பெயர் பேதுரு. இந்தப் பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன் .... ' (மத் 16:18 )என்று தலைமைப் பீடத்தை அறிவித்தாலும் அதன் பின் பலவித உடல் மன சோதனைகள் அவர் வாழ்வில் ஊடாடியது. அனைத்தையும் கடந்து வந்து இயேசு தமது இறப்பு உயிர்ப்பிற்குப் பின் 'என்னை அன்பு செய்கிறாயா? அன்பு செய்கிறாயா?' என்று மூன்றுமுறை கேள்வி கேட்டு பேதுருவின பணிவாழ்வின் உறுதித்தன்மை இறையன்பிலிருந்து துவங்கி மானிட அன்பில் பணியாக நிறைவடைய வேண்டும் என்பதை உறுதிபடுத்தினார்.

ஒரு நல்ல தலைவன் பணிவிடை ஏற்பவனாக அல்ல. பணிவிடை செய்பவனாக, தாழ்ச்சி நிறைந்தவனாக தம்மைக் கடையாக்கிக் கொள்பவனாக இருக்க வேண்டும் என்பதனை சொல்லால் மட்டுமல்ல செய்முறை விளக்கமாகவும் செய்துகாட்டி புரிதலை ஏற்படுத்தியவர் நம் தெய்வம்.

ஒரு தலைவர் என்பவர் தன்னைப் பின்தொடரும் குழுவிற்கு வழிகாட்டியாக முன்செல்ல வேண்டும் ஒரு பாதுகாப்பாளராக பின்செல்ல வேண்டும் என்ற தலைமையத்துவ பண்பின்படி இயேசுவின் தடம் பற்றி நல்லதொரு ஈடில்லா தலைவராக பேதுரு திரு அவையை ஏற்படுத்தி வழிநடத்தியது நாம் அறிந்ததே.

அனைத்து ஆளுமையும் இயேசு வாக்களித்த தூய ஆவியார் என்னும் துணையாளர் அளித்த அருள்பொழிவினால் கிடைத்த கொடையாகும். திண்மை மிகுந்த தனித்துவ ஆற்றலினால். குரலை உயர்த்திப் பேசுபவர் தலைவர் அல்ல , பேசும்போது கூட்டத்தின் குரலை அடங்கச் செய்யும் அளவுக்கு கூட்டத்தை தமது உண்மையினால் ஈர்த்துக் கொள்பவரே உண்மையான தலைவர் என்பார்கள். அவ்வகையில் பேதுரு பேசினாலே கூட்டம் பாவத்தை உணர்ந்தது, மனம்மாறியது, தூய ஆவியாரால் நிரப்பப்பட்டு அதிர்ந்தது. இறையன்பில் நிறைந்து மனித அன்பில் கரைந்து ஒன்றிணைந்து கொண்டது. இதை தொடக்க கால நம்பிக்கை கொண்டோரின் வாழ்க்கை முறை நமக்குக் கற்றுத் தருகிறது. எனவே பேதுருவின் வழிவந்த தலைவர்களுக்கு அவர்களின் பணிகளில் துயர் அளிக்காமல் துணை நின்று நமது சீர்மிகு நற்செய்திப் பணியினை மேம்படுத்துவோம். மூப்பர்களுக்கும் மக்களுக்கும் பேதுரு கூறிய அறிவுரையைப் (1பேது 5) பின்பற்றி 'கிறிஸ்துவுக்குள் என்றும் நிலைக்கும் பங்குகொள்ளும் அழைப்பிற்கேற்ப வாழ்வோம்' (1பேது 5: 10).

## தூய ஆவியாரின் அருள்பொழிவு:



'உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் வரும்போது அவர் முழு உண்மையை நோக்கி உங்களை வழிநடத்துவார்' (யோவா. 16:13) என்பது சீடர்களுக்கு இயேசுவின் வாக்குறுதியாக அளிக்கப்பட்டது. அந்த துணையாளரின் வருகையினால் அவர்களில் ஏற்படப்போகும் மாற்றம் எத்துனை தனித்துவ வல்லமையாக செயலாற்றும் என்பதனை இயேசு சீடர்களிடம் விடைபெறும் சொற்பொழிவில் விளக்குவதைப் பார்க்கிறோம் (யோவா 16) அவர் வாக்களித்து விட்டார் ஆனால் தூய ஆவியார் எப்படி இருப்பார் எப்போது வருவார் என்ன நடக்கும்... சீடர்களுக்கு எதுவும் தெரியாது எனினும் எதிர் நோக்கில் அசையா உறுதியோடு ஒன்று கூடி மன்றாடிக் கொண்டிருந்தனர். கண்ணுக்குத் தெரியாதவை பற்றிய ஐயமற்ற நிலையில் ஆழ்ந்திருந்தனர். எதிர்நோக்கி இருந்ததில் அசையா நம்பிக்கை கொண்டிருந்தனர். 'கண்ணுக்கு தெரிவதை நோக்குதல் எதிர்நோக்கு ஆகாது... நாமோ காணாத ஒன்றை எதிர்நோக்கி அதற்காக தளரா மனதோடு காத்திருத்தலே' (உரோ 8:25) எதிர்நோக்கு. திருத்தூதர்கள் தூய ஆவியானவரை எதிர்நோக்கி இருந்து பெற்றுக் கொண்டனர். அந்த ஆவியானவர் அவர்களுக்கு உயிராய் இருந்தார். அவர்களின் உடல் தூய ஆவியார் தங்கும் ஆலயமாயிற்று. அவர்களின் உயிர் மூச்சாகவும் இயங்கு சக்தியாகவும் வலுவூட்டும் ஆற்றலாகவும் இருந்து ஆலோசனைகளை தந்து வழிகாட்டி இறையாட்சிப் பணியினை விரிவுபடச் செய்தார்.

தூய ஆவியாராம் துணையாளர் நமக்கும் திருமுழுக்கு என்ற திருவருட்சாதனத்தின் மூலம் கொடையாய் அளிக்கப்பட்டுள்ளார். நாமும் நற்செய்தி அறிவிப்பின் சீரிய பொறுப்பாளர்கள் என்பதனால் அவரின் மென்குரலின் சத்தத்தை உள்ளார்ந்த விதமாய் கேட்டு உணர்ந்து அவரின் வழிநடத்துதலில் பணிபுரிவோம். 'நமக்குள் குடி கொண்டுள்ள தூய ஆவியாரால் ஒப்படைக்கப்பட்ட நல்ல போதனையைக் காத்துக் கொள்வோம்' (2.திமோ 1:14).

நற்பணி **ஜெஸி. P.**

ஜூன் 2025

# நற்செய்திப் பணிக்குழு பணித்திட்டம்

| நாள் | நிகழ்வு | இடம் |
|---|---|---|
| 01. | புதிய பணியாளர்கள் பயிற்சி | அருள்சான்று நிலையம். பரமக்குடி<br>காளையார்கோவில். புதுக்கோட்டை |
| 01. | விரிவாக்க உள்ளுயிர் குழுக் கூட்டம். (முற்பகல்) | அருள்சான்று நிலையம். பரமக்குடி |
| 01 | பயிற்சியாளர்கள் பயிற்சிப் பாசறை (பிற்பகல்) | அருள்சான்று நிலையம். பரமக்குடி |
| 03. | அருளமுது ஆதாரக்குழு கூடுகை | அமைதியகம். காயாவயல்.<br>அருள்சான்று நிலையம். பரமக்குடி |
| 07 | ஆவியானவர் பெருவிழா திருவிழிப்பு | ஆனந்தா அருங்கொடை மையம்.<br>ரஸ்தா |
| 07. | நற்பணி வளன் பாஸ்கல் இல்ல திருமண உறுதிப்படுத்தும் விழா | மா.சமுத்திரம். |
| 14. | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித குழந்தை தெரசாள் கோவில்<br>தங்கச்சிமடம் |
| 14. | வட்டாரத் தியானக் கூட்டம் | இராமேஸ்வரம். தங்கச்சிமடம்<br>பாம்பன் வட்டாரங்கள் |
| 15. | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித செபமாலை அன்னை கோவில். இராமநாதபுரம்<br>வியான்னி அருள்பணி மையம். சிவகங்கை<br>புனித அருளானந்ர் திருத்தலம். ஓரியூர்<br>உலக இரட்சகர் கோவில் பட்டுக்கோட்டை<br>புனித மரியன்னை கோவில். பூதலூர்<br>புனித லூர்து அன்னை கோவில். அம்மாபேட்டை<br>புனித அடைக்கல அன்னை கோவில். திருமயம் |
| 15. | வட்டாரத் தியானக் கூட்டம் | புளியால். சருகணி. தேவகோட்டை.<br>சாயல்குடி. இராஜசிங்கமங்கலம் வட்டாரங்கள் |
| 21. | 2ஆம் வத்திகான் சங்க கொள்கை திரட்டு மறுவாசிப்பு கருத்தரங்கம் | அருள்சான்று நிலையம். பரமக்குடி |
| 22. | 2ஆம் வத்திகான் சங்க கொள்கை திரட்டு மறுவாசிப்பு கருத்தரங்கம் | அமலஅன்னை அமைதியகம். காயாவயல் |
| 22 | புதிய பணியாளர்கள் பயிற்சி | அமல அன்னை அமைதியகம். காயாவயல்<br>புனித ஆரோக்கிய அன்னை கோவில். சாயல்குடி<br>தூய ஆவியார் கோவில். இராஜசிங்கமங்கலம்<br>புனித பேதுரு கோவில். சி.கே. மங்கலம்<br>புனித பாத்திமா அன்னை கோவில். திருவாரூர்<br>குழந்தை இயேசு கோவில். நமணசமுத்திரம் |
| 22. | வட்டாரத் தியானக் கூட்டம் | இடைக்காட்டூர். மானாமதுரை.<br>ஆவுடைப்பொய்கை வட்டாரங்கள் |
| 27-29 | தம்பதியர்கள் சிறப்புப் பயிற்சி | திண்டுக்கல் |

| நாள் | மையம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 01.06.25 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி S. இராஜேந்திரன்<br>நற்பணி M. அருள்மரியநாயகம்<br>நற்பணி J. சார்லஸ் |
| 01.06.25 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம், காளையார்கோவில் | நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>நற்பணி S. ஆரோக்கியசாமி<br>நற்பணி A. யூஜின் அமலராஜ்<br>நற்பணி M. லூயிஸ் ஜான் போஸ்கோ |
| 14.06.25 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி G.M.S. ராணி<br>நற்பணி A. ஆரோக்கியமேரி<br>நற்பணி S. அந்தோணி பிரகாஷ்<br>நற்பணி A. ஜான்சிமேரி |
| 15.06.25 | புனித செபமாலை அன்னை கோவில், இராமநாதபுரம் | நற்பணி J. அருள்இளங்கோ<br>நற்பணி S. இராஜேந்திரன்<br>நற்பணி A. ஞானசெல்வி<br>நற்பணி J. சார்லஸ் |
| 15.06.25 | வியான்னி அருள்பணிமையம் சிவகங்கை | நற்பணி M. சகாயமேரி<br>நற்பணி L. ஜோசப்இருதயம்<br>நற்பணி A. யூஜின் அமலராஜ்<br>நற்பணி P. சகாயராணி |
| 15.06.25 | புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர் | நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>நற்பணி S. பால்ராஜ்<br>நற்பணி S. ஆரோக்கியசாமி<br>நற்பணி இரா. அருள்பிரகாசம் |
| 22.06.25 | அமலஅன்னை அமைதியகம் காயாவயல் | Sr. பச்சைஜோதி<br>நற்பணி A. சத்தியேந்திரன்<br>நற்பணி P. அமலோற்பவஆரோக்கியராணி<br>நற்பணி கோ.அம்பிகா எலியாஸ் |
| 22.06.25 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி M. அருள்மரியநாயகம்<br>நற்பணி T. ஸ்டீபன்<br>நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல்<br>நற்பணி A. சந்திராபுஷ்பா |
| 22.06.25 | தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி A. ஜான்சிமேரி<br>நற்பணி A.R. சூசைராஜ்<br>நற்பணி S. தைனஸ்மேரி |
| 22.06.25 | புனித பேதுரு கோவில் சி.கே. மங்கலம் | நற்பணி S. சகாயராணி<br>நற்பணி S. பால்ராஜ்<br>நற்பணி A. சகாயதமிழ்செல்வி |

| நாள் | மையயம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 01.06.25 | திரு இருதய ஆண்டவர் கோவில், புதுக்கோட்டை | நற்பணி S. சகாயராணி<br>நற்பணி S. பால்ராஜ்<br>நற்பணி P. அமலோற்பவஆரோக்கியராணி |
| 15.06.25 | உலக இரட்சகர் கோவில் பட்டுக்கோட்டை | நற்பணி A. சத்தியேந்திரன்<br>நற்பணி V. செங்கோல்மேரி |
| 15.06.25 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், பூதலூர் | நற்பணி M. மரிய கிரகோரி<br>நற்பணி S. சேசுராஜா |
| 15.06.25 | புனித லூர்துமாதா கோவில் அம்மாபேட்டை | நற்பணி A. சகாயராஜா<br>நற்பணி S. சகாயராணி |
| 15.06.25 | அடைக்கலமாதா கோவில் திருமயம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி M. லூயிஸ்ஜான்போஸ்கோ |
| 22.06.25 | புனித பாத்திமா அன்னை கோவில், திருவாரூர் | நற்பணி A. சகாயராஜா<br>நற்பணி J. அருள்இளங்கோ |
| 22.06.25 | குழந்தை இயேசு கோவில் நமணசமுத்திரம் | நற்பணி L. ஆரோக்கியசாமி<br>செயலர் |

# வானவில்

**ஏற்றம் தரும் எதிர்நோக்குக் கூடுகை (உரோ 5:5)**

## தயாரிப்பு இறைவேண்டல்

எதிர்நோக்கைத் தரும் / வானகத் தந்தையே! / அருள் தரும் யூபிலி ஆண்டை / திரு அவை வழியாகக் / கொடையாக கொடுத்து / எதிர்நோக்கின் திருப்பயணிகளாகப் பயணிக்க/ நீர் எங்களுக்கு / வழங்கிவரும் / அருள் கொடைகளுக்காக/ உம்மைப் போற்றிப் புகழ்ந்து / உமக்கு நன்றி கூறுகிறோம்./ இப்புனித ஆண்டின் / அருள்வாழ்வுச் செயல்பாடுகள் / எங்களுக்குள் / அகப்புதுப்பித்தலை உருவாக்கி,/ எதிர்நோக்குடன் வாழச்செய்யும் / இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள நம்பிக்கையில் / உறுதிப்படத் / துணைபுரிவனவாக. / நற்செய்திப் பணியாளர்களாகிய / நாங்கள் உமது பேரிரக்கத்தை நம்பி, / திட்டமிட்டு நடத்தவுள்ள / ‘வானவில்’ என்னும் எதிர்நோக்குக் கூடுகையை / உமது பராமரிப்பில் ஒப்படைக்கின்றோம்.

இத்திருநிகழ்வின் / செயல்பாடுகள் அனைத்தும் / நாங்கள் கடவுளை அணுகிச் செல்ல வழிகாட்டி, / கிறிஸ்துவிடம் நாங்கள் கொண்டிருக்கும் / எதிர்நோக்கு / இவ்வுலகை மட்டும் சார்ந்ததன்று / என்பதை உணரச் செய்தருளும்.

குன்றா எதிர்நோக்கோடு / இயேசுவின் சீடர்களாய்/ தகைமையுடன் வாழ / இக்கூடுகை எங்களுக்கு/ மனஉறுதியைத் தருவதாக!

எதிர்நோக்கின் / சீர்மிகு மாதிரியாக விளங்கும் / அன்னை மரியாவே / எங்களுக்காக / வேண்டிக்கொள்ளும். ஆமென்.



புனித ஜஸ்டின் பாலஸ்தீன நாட்டில் உள்ள சமாரியாவில் கி.பி. 100 வது ஆண்டில் பிறந்தார். இவருக்கு சிறு வயது முதலே நல்ல தத்துவத்தைக் கற்றறிய வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. எனவே இவர் பலரிடம் சென்று தத்துவத்தைக் கற்றறிய முற்பட்டார். ஆனால் யார் கற்றுக்கொடுத்த தத்துவமும் இவருக்கு மனநிறைவைத் தரவில்லை.

இந்த சமயத்தில்தான் இவர் எபேசுஸ் கடற்கரையில் நின்றுகொண்டிருந்தபோது பெரியவர் ஒருவர் இவரிடம் கிறிஸ்துவைக் குறித்து போதிக்கத் தொடங்கினார். கிறிஸ்து மானிடர் யாவருக்காகவும் தன்னுடைய உயிரையே தந்தார். அதன்மூலம் மக்களை அவர்களுடைய பாவத்திலிருந்து விடுவித்து அவர்களுக்கு மீட்பினைத் தந்தார். அவருடைய நினைவாக அவருக்காக பலரும் மறைசாட்சியாக உயிர் துறக்கிறார்கள் என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்.

பெரியவர் சொன்ன வார்த்தைகளால் தொடப்பட்ட ஜஸ்டின் திருமுழுக்குப் பெற்று கிறிஸ்துவராக மாறினார். மட்டுமல்லாமல், அதுவரைக்கும் மனித வாழ்க்கை தொடர்பாக அவர் எழுப்பிய கேள்விகளுக்கு விடையையும் கிறிஸ்தவ மறையில் கண்டுகொண்டார். இதனால் கிறிஸ்தவ நெறி அவருக்கு மிகவும் பிடித்துப் போனது. எனவே அவர் அதுவரைக்கும் கற்றுவந்த பிளேட்டோவின் தத்துவார்த்த சிந்தனைகளையும் கிறிஸ்தவ நெறியின் தத்துவார்த்த சிந்தனைகளையும் இணைத்து புதிய தத்துவார்த்த சிந்தனையினை உலகிற்கு அளித்தார். அதோடு கூட கிறிஸ்தவ நெறியை எங்கும் துணிவோடு அறிவிக்கத் தொடங்கினார். இவருடைய நற்செய்தி அறிவிப்பினால் பலரும் கிறிஸ்துவைப் பின்பற்றத் தொடங்கினார்கள்.

இதற்கிடையில் மார்குஸ் அரேலியஸ் என்ற உரோமை மன்னன் கிறிஸ்தவத்தைப் பின்பற்றக்கூடியவர்களை சிறைபிடித்து சித்ரவதை செய்யத் தொடங்கினான். ஜஸ்டினும் அவருடைய நண்பர்களும் கிறிஸ்தவத்தை எல்லாருக்கும் அறிவிக்கின்றார்கள் என்று கேள்விப்பட்டு அவர்களை விசாரணைக்கு உட்படுத்தினான். விசாரணையின்போது உரோமை அரசனும் ஆளுநனும் ஜஸ்டின் மற்றும் அவருடைய நண்பர்களிடம், 'நீங்கள் கிறிஸ்துவை மறுதலித்துவிட்டு, உரோமைக் கடவுளை வழிபடுங்கள். அப்படிச் செய்தால், நீங்கள் விடுவிக்கப்படுவீர்கள்' என்று வஞ்சக வார்த்தைகளைப் பேசினார்கள். ஆனால் அவர்கள் நயவஞ்சககர்களின் வார்த்தைகளுக்கு அடிபணியாமல் கிறிஸ்தவ நம்பிக்கையில் மிக உறுதியாக இருந்தார்கள்.

இதனால் சினம் கொண்ட அரசன் ஜஸ்டினையும் அவருடைய நண்பர்களையும் தலைவெட்டிக் கொன்றுபோட்டான். கி.பி. 165 ஆம் ஆண்டு இதே நாளில் ஜஸ்டின் ஆண்டவர் இயேசுவுக்காக இரத்தம் சிந்தி தன்னுடைய இன்னுயிரைத் துறந்தார்.

மாறாக என் பொருட்டுத் தம்மையே அழித்துக்கொள்கின்ற எவரும் வாழ்வடைவர்' (மத் 16:25)

நற்பணி **செங்கோல்மேரி,** காளையார்கோவில்




கடந்த பகுதிகளில் முதல் நான்கு அன்பின் மொழிகள் பற்றிபார்த்தோம். இப்பகுதியில் தொடுதல் என்ற அன்பின் மொழி பற்றி பார்ப்போம்.

ஆரோக்கியமான தொடுதல் என்பது ஒரு அன்பின் மொழி. இது பாசத்தை வெளிப்படுத்துவதற்கும், உணர்வுகளைப் பகிர்வதற்கும் ஒரு வழியாகும். தொடுதலின் மூலம், உடல் ரீதியிலான இணைப்பு, நம்பிக்கை, பாதுகாப்பு மற்றும் பாசத்தை வெளிப்படுத்தலாம்.

**தொடுதல் ஒரு முக்கிய மொழி:** தொடுதல் என்பது மனிதர்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கும், இணைவதற்கும் பயன்படுத்தும் ஒரு முக்கிய வழி. தொடுதல் மூலம் பாசத்தை வெளிப்படுத்தலாம், ஆறுதல் கூறலாம், ஆதரவை தெரிவிக்கலாம், மற்றும் அன்பை பரிமாறிக் கொள்ள முடியும்.

**உடலில் தொடுதல்:** தொடுதல் மூலம், உடல் ரீதியான பாசத்தை வெளிப்படுத்தலாம். தழுவல், கட்டிப்பிடித்தல், கையைப் பிடித்து, மசாஜ் செய்தல் போன்ற செயல்களின் மூலம், அன்பை வெளிப்படுத்தலாம்.

**பாசத்தை வெளிப்படுத்துதல்:** மென்மையான தொடுதல், கட்டிப்பிடித்தல், முத்தம் போன்ற பாசத்தின் சின்னங்கள், குழந்தைகள் மற்றும் பெரியோர்கள் என அனைவருக்கும் ஒரு பயனுள்ள மொழி.

**ஆரோக்கியமான உறவுகளுக்கு:** தொடுதல், உறவுகளை வலுப்படுத்தவும், பாசத்தை வெளிப்படுத்தவும் ஒரு வழி. ஆரோக்கியமான உறவுகளின் ஒரு அங்கமாக, தொடுதல் மூலம் பாசத்தை பரிமாறிக் கொள்ளலாம்.

ஐந்து அன்பின் மொழிகளில் உடல் தொடுதல் ஒரு முக்கிய மொழி. தொடுதலின் மூலம் அன்பை வெளிப்படுத்துபவர்களும், உணர்பவர்களும் ஒருவருக்கொருவர் நெருக்கமாக இருக்கிறார்கள்.

**உணர்வுகள்:** தொடுதலின் மூலம், நல்வாழ்வு, இணைந்திருக்கும் உணர்வு, ஆறுதல் மற்றும் பாதுகாப்பை உணரலாம்.

தொடுதல் என்பது வெறுமனே ஒரு உடல் ரீதியான செயல் அல்ல, மாறாக ஒரு உணர்வுகளின் மொழி, அன்பு, பாசம் மற்றும் உறவுப் பாசத்தை வெளிப்படுத்துவதற்கான ஒரு வழி.

உலகை நாம் சந்திக்கும் முதல் உணர்வும், மரணத்தின் விளிம்பை நெருங்கும்போது நம்மை விட்டு வெளியேறும் இறுதி உணர்வும் தொடுதல்தான். 'பார்வைக்கு முன், பேச்சுக்கு முன் தொடுதல் வருகிறது' என்று மார்கரெட் அட்வுட் தனது தி பிளைண்ட் அசாசின் (2000) நாவலில் எழுதுகிறார். 'இது முதல் மொழி மற்றும் கடைசி மொழி, அது எப்போதும் உண்மையைச் சொல்கிறது.' நமது உயிரியல் இதை நிரூபிக்கிறது. மனித கருக்கள் லானுகோ எனப்படும் மெல்லிய முடிகளால் மூடப்பட்டிருக்கும், இது கர்ப்பத்தின் 16 வாரங்களில் தோன்றும். இந்த நுட்பமான இழைகள் நம் தாயின் அம்னோடிக் திரவம் நம் தோலில் மெதுவாகக் கழுவுவதன் இனிமையான உணர்வுகளை மேம்படுத்துகின்றன, இது ஒரு குழந்தை பிறந்தவுடன் கட்டிப்பிடிப்பதன் மூலம் பெறும் சூடான மற்றும் அமைதியான உணர்வுக்கு முன்னோடியாகும் என்று சில ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்

இருப்பினும், சமீப காலமாக, தொடுதல் ஒரு 'தடை சகாப்தத்தை' கடந்து வருகிறது: இந்த மிக முக்கியமான புலன்களுக்கு இது ஒரு கடினமான காலமாகும். 2020 ஆம் ஆண்டு தொற்றுநோய் பொது இடங்களில் இருமல் மற்றும் தும்மலுக்கு அடுத்தபடியாக தொடுதலை இறுதித் தடையாக மாற்ற உதவியது.

மக்கள் ஒருவரையொருவர் தொடுவதில் அதிக பயம் கொண்டிருந்த ஒரு காலத்திற்குப் பிறகு தற்போதைய தொடுதல் வறட்சி வந்துவிட்டது. தொழில்நுட்பம் இந்த தூரத்தை சாத்தியமாக்கியுள்ளது. ஏனெனில் சமூக வலைப்பின்னல் தளங்கள் குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினருக்கான சமூக தொடர்புக்கான முதன்மை ஆதாரமாக மாறியுள்ளன. சமீபத்திய கணக்கெடுப்பு 95 சதவீத டீனேஜர்கள் ஸ்மார்ட்போன் அணுகலைக் கொண்டுள்ளனர் என்றும் . 45 சதவீதம் பேர் 'கிட்டத்தட்ட தொடர்ந்து' ஆன்லைனில் இருப்பதாகக் கூறுகிறார்கள் என்றும் காட்டுகிறது .

தொடுதல் சந்தேகத்திற்கு மற்றொரு காரணம், தொடுதல் என்பது ஆண்கள் பெண்கள் மீது தங்கள் அதிகாரத்தைத் திணிக்கப் பயன்படுத்தும் ஒரு ஆயுதம் என்பது குறித்த உலகளாவிய விழிப்புணர்வு அதிகரித்து வருவதுதான்.

1990களில், தொடுதல் பற்றாக்குறையால் மனித வளர்ச்சியில் ஏற்படும் அதிர்ச்சியூட்டும் விளைவுகளை நிரூபிக்கும் ஆராய்ச்சி அலை ஒன்று இருந்தது. வாழ்க்கையின் முதல் ஆண்டுகளில் அரிதாகவே தொடப்பட்ட ருமேனிய அனாதை இல்லங்களின் குழந்தைகளுக்கு, பின்னர் அறிவாற்றல் மற்றும் நடத்தை குறைபாடுகள் இருந்ததாகவும், மூளை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இருந்ததாகவும் பல ஆய்வுகள் காட்டுகின்றன. வயது வந்தவர்களில், சமூக தொடர்பு குறைவாக உள்ளவர்கள், வலுவான சமூக உறவுகளைக் கொண்டவர்களுடன் ஒப்பிடும்போது, முன்னதாகவே இறக்கும் அபாயம் அதிகம் உள்ளது. வயதாகும்போது தொடுதல் மிகவும் முக்கியமானது.

தொடுதல் என்பது முதலில் உருவாகும் உணர்வு, மேலும் நமது மிகப்பெரிய உறுப்பான தோலால் இது மத்தியஸ்தம் செய்யப்படுகிறது. நமது வளர்ச்சியின் பாதையில் இவ்வளவு முன்கூட்டியே பிறந்த சில பாலூட்டிகளில் நாமும் ஒருவர். நமது மோட்டார் அமைப்பு முழுமையாக வளர்ச்சியடையவில்லை, நமக்கு நாமே உணவளிக்க முடியாது, ஒரு குறிப்பிட்ட வரம்பைத் தாண்டி நமது சொந்த வெப்பநிலையை நம்மால் கட்டுப்படுத்த முடியாது - இவை அனைத்தும் நாம் உயிர்வாழ மற்றவர்களை நம்பியிருக்கிறோம் என்பதாகும். ஒரு குழந்தையாக, பராமரிக்கப்படுவது முதன்மையாக தொட்டுணரக்கூடிய தொடர்பு மற்றும் 'கைப்பிடிக்கப்படுவது' ஆகியவற்றைப் பொறுத்தது. எந்தவொரு அடிப்படைச் செயலிலும் தொடுதல் அடங்கும், அதாவது டயப்பர்களை மாற்றுதல், குளித்தல், உணவளித்தல், தூங்குதல் மற்றும், நிச்சயமாக, கட்டிப்பிடித்தல். வாழ்க்கையின் முதல் சில மாதங்களை நாம் கடந்து வந்த பிறகும், சமூக தொட்டுணரக்கூடிய தொடர்புகள் நமது வளர்ச்சிக்கு மிக முக்கியமானவை . உதாரணமாக, பிரசவத்திற்குப் பிந்தைய மனச்சோர்வு குழந்தைகளுக்கு எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துவதாக அறியப்படுகிறது, ஆனால் தாய்வழி தொடுதலும் ஒரு பாதுகாப்பு விளைவை ஏற்படுத்தும். எனவே மனச்சோர்வு உள்ள தாய்மார்களுக்கும் அவர்களின் குழந்தைகளுக்கும் இடையிலான தொட்டுணரக்கூடிய தொடர்புகளை ஊக்குவிப்பது பிற்காலத்தில் குழந்தைகளுக்கு எதிர்மறையான விளைவுகளைக் குறைக்கும். முக்கியமாக, நன்மை பரஸ்பரமானது: குழந்தை மற்றும் பெற்றோருக்கு இடையேயான தோலிலிருந்து தோலுக்கான தொடர்பு தாய்மார்கள், தந்தையர் மற்றும் குழந்தைகளில் ஆக்ஸிடாஸின் அளவை அதிகரிக்கிறது, இது ஒரு நல்ல உணர்வை வழங்குகிறது, ஆரோக்கியமான உறவின் வளர்ச்சியை ஊக்குவிக்கிறது மற்றும் பெற்றோர்-குழந்தை தொடர்புகளில் ஒத்திசைவை மேம்படுத்துகிறது.

**விவிலிய பின்னணி :**

1.பிரியமானவர்களே, ஒருவரையொருவர் நேசிப்போம்; அன்பு தேவனுடையது. அன்பு செலுத்தும் யாவரும் தேவனால் பிறந்தவர்கள்; கடவுளை அறிவார்கள். அன்பு செய்யாதவர் கடவுளை அறியமாட்டார்; (1யோவான் 4 7-10)

2.நான் வீட்டிலிருந்து தூரமாய்த் தனித்திருந்த பொழுது, என்னை உங்கள் வீட்டிற்கு

அழைத்தீர்கள். நான் ஆடையின்றி இருந்தபோது, நீங்கள் உடுக்க ஆடை அளித்தீர்கள். நான் நோயுற்றபோது, என்னைக் கவனித்துக் கொண்டீர்கள். நான் சிறைப்பட்டபோது நீங்கள் என்னைக் காண வந்தீர்கள்' என்று சொன்னார். (மத்தேயு 25 35-40)

3.இயேசு குழந்தைகளை தொட்டு ஆசீர்வதித்தார். பிறகு இயேசு அவர்களைத் தொட்டு ஆசீர்வதித்தார். (மாற்கு 10 13-16)

**நடைமுறை செயலாக்கம்:**

உடல் ரீதியான தொடுதல் மூலம் அன்பைத் தெரிவிக்கும் குழந்தைகளுக்கு, ஒரு மென்மையான அரவணைப்பு, ஒரு முத்தம் அல்லது ஒரு ஆறுதலான அரவணைப்பு ஆகியவை ஆழ்ந்த உறுதியளிக்கும். பாசத்தின் இந்த எளிய சைகைகள் அன்பு மற்றும் பாதுகாப்பின் சக்திவாய்ந்த உறுதிமொழிகளாகும், நல்வாழ்வு மற்றும் இணைப்பு உணர்வை ஊக்குவிக்கின்றன.

**கூடுதல் யோசனைகள் பின்வருமாறு:**

**கட்டிப்பிடிப்புகள் மற்றும் அரவணைப்புகள்:**

நிபந்தனையற்ற அன்பைக் காட்ட ஒரு கட்டிப்பிடிப்பு அல்லது அரவணைப்புடன் நாளைத் தொடங்கி முடிக்கவும்.

**முதுகுத் தேய்த்தல்:**

படுக்கைக்குச் செல்வதற்கு முன் மென்மையான முதுகுத் தேய்த்தல் அல்லது மசாஜ்களைச் செய்வது அவர்களுக்கு ஓய்வெடுக்க உதவும்.

**கைப்பிடித்தல்:** ஒன்றாக நடக்கும்போது கைகளைப் பிடித்துக் கொள்ளுங்கள், இது பாதுகாப்பு மற்றும் தொடர்பை வழங்குகிறது.

**விளையாட்டுத்தனமான தொடுதல்:**

சௌகரிய நிலையை மதித்து, விளையாட்டுத்தனமான மல்யுத்தம் அல்லது டிக்கிள் சண்டைகளில் ஈடுபடுங்கள்.

**ஆறுதல் தொடுதல்:**

துன்பம் அல்லது சோகத்தின் போது பாதுகாப்பு உணர்வை வழங்க உடல் ரீதியாக ஆறுதல் அளிக்கவும்.

**ஹை ஃபைவ்ஸ் மற்றும் ஃபிஸ்ட் புடைப்புகள்:** கொண்டாட்டங்கள் அல்லது ஊக்கத்திற்காக இவற்றைப் பயன்படுத்துங்கள், நேர்மறை வலுவூட்டலை ஊக்குவிக்கவும்.

**முடி துலக்குதல் அல்லது ஸ்டைலிங்:**

ஒரு வழக்கமான வேலையை ஒரு பிணைப்பு தருணமாக மாற்றவும், குறிப்பாக அவர்கள் அதை விரும்பினால்.

**அரவணைக்கும் நேரம்:** ஒரு புத்தகம் படிக்கும்போது அல்லது ஒரு திரைப்படம் பார்க்கும்போது அரவணைக்க நேரம் ஒதுக்குங்கள்.

**படுக்கை நேர டக்ஸ்:** இரவில் நெற்றியில் ஒரு முத்தத்துடன் அவற்றை உள்ளே இழுக்கும் சடங்கைச் செய்யுங்கள்.

**தோள்பட்டை சவாரிகள்:** இளைய குழந்தைகளுக்கு தோள்பட்டை சவாரிகளை வழங்குங்கள், இது சிலிர்ப்பூட்டும் மற்றும் வளர்க்கும்.

**அசைபோட அரை நிமிடம்:**

'ஆரோக்கியமான தொடுதல் நம் ஆன்மாவிற்கு நல்ல மருந்து.'

**சகோ. S.ஜான் ஜோ பிரபாகர். SHJ.**

மனநல ஆற்றுபடுத்துநர், பரமக்குடி.

## யூபிலி ஆண்டில் என்னை மன்னியும்

- கடவுளின் ஆவியால் இயக்கப்படுகிறவர்களே கடவுளின் மக்கள் என்பதை அறிந்தும் ஆவியானவரின் இயக்கத்திற்கு உட்படாமல் ஊனியல்பின் இயக்கதிற்கு உட்பட்டு வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (உரோ 8:14).

- தூய ஆவியார் நமது வலுவற்ற நிலையில் நமக்குத் துணை நிற்கிறார் என்பதை உணராமல். சோர்விலும். தளர்சிசியிலும் ஆவியானவரின் துணையை நாடி வாழாமல் இருந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (உரோ 8:26).

- தூய ஆவியாரும் கடவுளுக்கு உகந்த முறையில் இறைமக்களுக்காக பரிந்து பேசுகிறார் என்பதை மறந்து ஆவியானவரின் பரிந்துரையை நாடாமல் வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (உரோ 8:27).

- நமது நன்மைக்காவே ஆவியார் அனைத்திலும் ஒத்துழைக்கிறார் என்பதை அறியாமல் அவரது அகத்தூண்டுதலைப் புறக்கணித்து வாழந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (உரோ 8:28).

நற்பணி S.P. சவரிமுத்து. இராம்நகர்

## செப வீரர்களுக்கு


ஆம் மாத செபக் கருத்து

- இயேசுவின் இதயத்தோடு உள்ள உறவில் வளர்வதால் அனைவரும் இறை ஆறுதலைப் பெற
- இரக்கம் என்ற இறைப்பண்பில் அனைவரும் வளர
- இந்திய பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே நிலவும் பதற்ற சூழல் மாறி அமைதி நிலவ
- போர்சூழல் நிலவும் நாடுகளில் அமைதி நிலைநாட்டப்பட
- தேர்ந்தொடுக்கப்ட்ட திருத்தந்தை 14ஆம் லியோ அவர்களின் உடல். உள்ள நலன்களுக்காகவும். அவருடைய பணிகளுக்காவும்
- இந்தியாவில் சனநாயக. கூட்டாட்சி மதச்சார்பின்மைக் கொள்கைகள் பாதுகாக்கப்பட
- புதிய கல்வி ஆண்டை துவங்கும் வேளையில் கல்வி நிறுவனங்கள் மாணவர்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்குத் திட்டமிட்டுச் செயல்பட

**விரும்பத்தக்க செயல்பாடு:**

- நம்மைவிட கீழ்நிலையில் உள்ளவர்களிடம் இரக்கப்பண்பை வெளிப்படுத்தி வாழ்தல்.
- ஏழ்மையில் உள்ள மாணவரின் கல்விக்கு உதவி வழிகாட்டல்.

# வாழ்த்தி செபிக்கிறோம்



இயேசுவின் இனிய சீடரே!
பேதுருவின் வழுவா வழிமரபே!
திருஅவையின் தியாகத் தலைமகனே!

## திருத்தந்தை லியோ XIV

வாழ்த்தி வரவேற்கிறோம்! பணிந்து செபிக்கிறோம்!

சிவகங்கை மறைமாவட்ட
தன்னார்வ நற்செய்திப் பணியாளர்கள்

## விண்ணகப்பிறப்பு



சிவகங்கை வட்டாரத்தைச் சார்ந்த நற்பணி B. சேசுராஜ் அவர்கள் 01.05.2025 அன்று விண்ணக பிறப்படைந்தார்கள்.



மகிண்டி மிக்கேல்பட்டணம் வட்டாரத்தைச் சார்ந்த கோடாரேந்தல் நற்பணி J. அல்போன்ஸ் மேரி அவர்கள் 17.05.2025 அன்று விண்ணக பிறப்படைந்தார்கள்.



இராமநாதபுரம் வட்டாரத்தைச் சார்ந்த நற்பணி R. புஷ்பம் அவர்கள் 23.05.2025 அன்று விண்ணக பிறப்படைந்தார்கள்.

இறைவா! நிலைவாழ்வை இவர்களுக்கு அளித்தருளும்.

படங்களைக் கொண்டு இறைவார்த்தையை கண்டுபிடியுங்கள்?

படங்களைக் கொண்டு நினைவுக்கு வரும் இறைவார்த்தையை சட்டென்று சொல்லுங்கள் பார்ப்போம்.

துப்பு வேண்டுமா? **எபேசியர் 1,2,3 அதிகாரங்களுக்குள்**










திரு இசைப்பயிற்சி – அருள்சான்று நிலையம்



புதிய பணியாளர்கள் அறிமுக அமர்வு – தஞ்சாவூர்





**Narseithi Paniyalar**
is published on behalf of the Commission for Proclamation,
Diocese of Sivagangai from Arulchandru Nilayam (Faith Resource Development Centre), Brothers of the Sacred Heart, Ulaganathapuram,
Paramakudi - 623 707, Ramnad Dist.
www.arulchandrunilayam.org |Email: arulchandrupmk@gmail.com